**கவனிக்க.-** இவ் வர்த்தமானியின் பகுதி VI இல் கேகாலை நீதி நிருவாகப் பிரிவின் 2014/2015 ஆம் ஆண்டுகளுக்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று இதே திகதியில் இதே வர்த்தமானி இலக்கத்தின் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1906 - 2015 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2015.03.13

*1906 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 8 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**டபிள்யூ.ஏ.ஏ.ஜீ.பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/4034.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்பி/28/04/2/எஸ்எல்ஓ/45- (சீஈ ஆர்)

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பொன்னகர் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அறிவியல் நகர் எனும் கிராமத்தில் இலுகே ஆர்./எல்.பீ/ சி.ஈ.எ/ 2012 வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் பிரமாணத்தில் 1/2ஹெக்டேயர் விஸ்தீரணமுடைய அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு மத்திய சுற்றாடல் அதிகாரி சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத் தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு: வீதி;
கிழக்கு: அரச காணி;
தெற்கு: தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை;
மேற்கு: தென்னை பயிர்ச்செய்கை சபை.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது (30) வருடங்கள் (2015.02.19 ஆந் திகதி தொடக்கம் 2045.02.18 வரை);

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான காணியின் வர்த்தகப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த 5 வருடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% குறையாமல் இருத்தல் வேண்டும்.;

தவணைப் பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

தண்டப் பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தகம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக் குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2015.02.19 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் முடியும் வரையிலும் இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்டுள்ள காரணத்தைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கான அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களைக் குறிப்பிட்டு கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் விண்ணப்பத்திற்கு அமைய இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 27.

3- 421

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/30928.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : அனு/11/4/2/07/01(2009)

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம், கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரகும்புர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ராஜாங்கன இடது கரையாய 03 பெரகும்புர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்சிபிகே 10 ஆம் இலக்க வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம் 276 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.039 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிட நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஜே.பி. இந்திராணி ஜயலத் என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

*2.* விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : ஏப்ரிபி 28 இல் காணித்துண்டு இலக்கங்கள் 775 மற்றும் 275;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 275 மற்றும் 282;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 282 மற்றும் 277;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 277 மற்றும் ஏப்ரிபி 18 இல் காணித்துண்டு இலக்கம் 775.

*3.* குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அங்கீகரித்த 1995 ஆம் ஆண்டிற்கான வர்த்தகப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த 5 வருடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% குறையாமல் இருத்தல் வேண்டும்.;

*தண்டப் பணம்*.- 1995 ஆம் ஆண்டிற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக் குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2014.11.21 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் முடியும் வரை குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது இந்தக் காணியை குத்தகைக்கு எடுத்த நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் தவிர்ந்த வேறு கீழ்க்குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத போது நீண்ட காலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேருக்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

*4.* இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களைக் குறிப்பிட்டு கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் விண்ணப்பத்திற்கு அமைய இக்குத்தகை வழங்கப்படும்.

எஸ்.ஏ.கலானி எம். தனசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2015, பெப்புரவரி 19.

3- 284

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.